# படல்கும்புர பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள படல்கும்புர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபையின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் இறுதியில் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை வருமானம் ரூபா 84,540 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,319,967 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூபா 10,689,976 தொகையான பொறுப்புக்கள் மற்றும் ரூபா 41,675 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 719,031 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 205,969 ஆக இருந்தது

### 2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே மூன்று வருமானத் தலைப்புக்கள் மற்றும் மூன்று செலவினத் தலைப்புக்களில் 19 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 611 | 66 | 308 |
| (ii) | வாடகை | 3,200 | 83 | 17 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,607 | 540 | 84 |
| (iv) | ஏனைய வருமானம் | 186 | - | 1 |

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான காணித் துண்டுகள் 2010 திசெம்பர் 14 ஆந் திகதி மாவட்ட காணி மீளமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்தது. கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்காக 2009 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து சுற்றாடல் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 11,312 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குப்பைகள் அகற்றுதல் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுப்பசளை செயற்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்